**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற, செவித்திறன் குறைபாடுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்குதல் – 2014–2015ஆம் ஆண்டிற்கு தொடர திட்டத் தொடராணை மற்றும் ரூ.3,85,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1 D) எண். 15,** **நாள்: 01.07.2014**

**ஜய–ஆனி 17, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.62, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 01.07.2013.
2. அரசாணை (1D) எண்.13, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 22.11.2013.
3 மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2482/சிபதி/2014, நாள் 28.05.2014 மற்றும் 26.06.2014.

––––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014 ஆம் நிதியாண்டில், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற, செவித்திறன் குறைபாடுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்க, ரூ.3,20,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கியும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், அதே பொதுத் தேர்வில் 10 ஆம் வகுப்பில் மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்த மற்றொரு செவித்திறன் குறையுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவிக்கு பரிசுத் தொகை வழங்க ரூ.20,000/–மும் மற்றும் 12 ஆம் வகுப்பில் மாநில அளவில் மூன்றாம் இடம் பிடித்த மற்றொரு செவித்திறன் குறையுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவிக்கான பரிசுத் தொகை ரூ.20,000/–மும், ஆக மொத்தம் ரூ.40,000/–, 2013–2014 ஆம் ஆண்டிற்கு, கூடுதல் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் நடப்பு நிதியாண்டு, 2014ல் நடைபெற்ற 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற பார்வையற்ற, செவித்திறன் குறையுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தினை தொடர திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.3.85 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், 12 ஆம் வகுப்பில் முதல் இடத்தை காதுகேளாதோர் 2 பேர் பெற்றுள்ளதாகவும், 10 ஆம் வகுப்பில் மூன்றாம் இடத்தை காதுகேளாதோர் 2 பேர் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

[த.பி.பா]

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 2014–2015 ஆம் நிதியாண்டில், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற, செவித்திறன் குறையுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்க, ரூ.3.85 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்) கீழ்க்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:–

| **வ. எண்** | | **வகுப்பு மற்றும் மாநில அளவில் பொது தேர்வில் பெறும் இடம்** | **வழங்கப்பட வேண்டிய தொகை** | **மொத்த தொகை** | |
|---|---|---|---|---|---|
| **I** | 1. | 10 ஆம் வகுப்பு<br>முதல் இடம் | ரூ.25,000/– x 2 நபர்<br>(பார்வையற்றோர்–1<br>மற்றும் காதுகேளாதோர்–1) | ரூ.50,000/– | |
| | 2. | 10 ஆம் வகுப்பு<br>இரண்டாம் இடம் | ரூ.20,000/– x 2 நபர்<br>(பார்வையற்றோர்–1<br>மற்றும் காதுகேளாதோர்–1) | ரூ.40,000/– | |
| | 3. | 10 ஆம் வகுப்பு<br>மூன்றாம் இடம் | ரூ.15,000/– x 3 நபர்<br>(பார்வையற்றோர்–1<br>மற்றும் காதுகேளாதோர்–2) | ரூ.45,000/– | |
| | | | | | ரூ.1,35,000/– |
| **II** | 1. | 12 ஆம் வகுப்பு<br>முதல் இடம் | ரூ.50,000/– x 3 நபர்<br>(பார்வையற்றோர்–1<br>மற்றும் காதுகேளாதோர்–2) | ரூ.1,50,000/– | |
| | 2. | 12 ஆம் வகுப்பு<br>இரண்டாம் இடம் | ரூ.30,000/– x 2 நபர்<br>(பார்வையற்றோர்–1<br>மற்றும் காதுகேளாதோர்–1) | ரூ.60,000/– | |
| | 3. | 12 ஆம் வகுப்பு<br>மூன்றாம் இடம் | ரூ.20,000/– x 2 நபர்<br>(பார்வையற்றோர்–1<br>மற்றும் காதுகேளாதோர்–1) | ரூ.40,000/– | |
| | | | | | ரூ.2,50,000/– |
| | | | | **மொத்தம்** | **ரூ.3,85,000/–** |

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| | |
|---|---|
| **2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூகநலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AA-பார்வையற்றோர் பள்ளி – 59–பரிசுகளும், வெகுமதிகளும் (கு.தொ.கு.2235–02–101–AA-5904).** | **ரூ.1,60,000/–** |

**[த.பி.பா]**

| | |
|---|---|
| **2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூகநலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AR-காது கேளாதோர் பள்ளிகள் – 59–பரிசுகளும், வெகுமதிகளும் (கு.தொ.கு.2235–02–101–AR-5900).** | **ரூ.2,25,000/–** |

5. இவ்வரசாணை, நிதித் துறையின் இசைவுடன் அ.சா.எண்.35648/நிதி(சந)/2014, நாள் 30.06.2014–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18/பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
**நகல்**
மாண்புமிகு அமைச்சர் (சந(ம)சஉதி) அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந.) துறை, சென்னை–9.
செயலரின் தனிச் செயலர் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்